# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

04.10.2020 ஞாயிற்றுக்கிழமை


# கொரோனாத் தொற்றுக்குள்ளானவருடன் பணியாற்றிய இரண்டு பேர் புங்குடுதீவில்

## 20 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஒக். 4
கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடையில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிவரும் யாழ்ப்பாணம், புங்குடுதீவைச் சேர்ந்த பெண்கள் இருவர் ஊர் திரும்பிய நிலையில் புங்குடுதீவில் சுகாதார நடவடிக்கைகளும் விசாரணைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. புங்குடுதீவு 12ஆம் வட்டாரம் பகுதியில் வசிக்கும் பெண்கள் இருவர்

2

## புதினம் தெரியுமோ?

ஓவர் பில்டப் உடம்புக்கு ஆகாது எண்டு சொல்லுவினம். அதுபோல தான் இப்ப இங்கத்த நிலைமையும் ஆகிப்போச்சு பாருங்கோ. இந்தக் கொரோனா எல்லா இடமும் பேயாட்டம் ஆடிக் கொண்டிருக்கு. நாங்கள் எல்லாத்தையும் அடக்கிப் போட்டம் எண்டு அரசாங்கமும் தம்பட்டம் அடிக்க, எங்கட சனமும் தாங்கள் நினைச்சபாட்டுக்குத் திரியத் தொடங்கிட்டினம். அரசாங்கம் தங்கட லாபத்துக்காக, தேர்தல நடத்தோனும் எண்டு அவசர அவசரமாக

2

## மீண்டும் ஊரடங்கு




கொழும்பு, ஒக். 4
கொரோனாப் பெருந்தொற்று சமூகத் தொற்றாக மாறியுள்ள நிலையில், இரு பொலிஸ் பிரிவுகளில் மீண்டும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மினுவங்கொட பெண்ணொருவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது நேற்று நள்ளிரவு அவதானிக்கப்பட்டு இன்று காலை அறிவிக்கப்பட்டது. இதையடுத்து மேலும் சமூகத் தொற்று

2

## இலங்கையில் மீண்டும் கொரோனா

கொழும்பு, ஒக்டோபர் 4
கம்பஹா, திவுலப் பிட்டிய பகுதியில் வசிக்கும் பெண்ணொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதையடுத்து மிக நீண்ட இடைவெளியின் பின்னர் கொரோனாப் பெருந்தொற்று இலங்கையில் சமூகத் தொற்றாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2

## மறுஅறிவித்தல் வரை பாடசாலைகள் மூடல்

கொழும்பு, ஒக். 4
நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்குமான 2ஆம் தவணைக்கான விடுமுறை நாளை முதல் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இலங்கையில் மீண்டும் கொரோனா சமூகத்தொற்று அவதானிக்கப்பட்டதை அடுத்தே இந்த அறிவிப்பு

2

## அவதானம் அவசியம்

### இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 4
நாட்டில் கொரோனாவைக் கட்டுப்படுத்தியுள்ளமையால் அந்த வைரஸ் மீண்டும் வராது என்று அர்த்தம் இல்லை

2

## கம்பஹாவில் பெண்ணொருவருக்கு உறுதி

## மூடப்பட்டது ஆடைத்தொழிற்சாலை

கொழும்பு, ஒக். 4
மினுவங்கொடவைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்ட நிலையில் அவர் பணிபுரியும் ஆடைத்

2



## ட்ரம்பின் உடல்நிலை பின்னடைவு

வொஷிங்டன், ஒக். 4
அமெரிக்க அதிபர் ட்ரம்பின் உடல்நிலையில் சற்றுப் பின்னடைவு ஏற்பட்ட஌ள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப்,

2

## 400 பேருக்கு பி.சி.ஆர்

கொழும்பு, ஒக். 4
கொரோனா சமூகத் தொற்றாக உருவாகியுள்ளதை அடுத்து துரித கதியில் 400 பேருக்கு பி.சி.

2

## களனி பல்கலைக்கு ஒருவாரம் விடுமுறை

கொழும்பு, ஒக். 4
களனி பல்கலைகழகம் மற்றும் விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவனங்களுக்கு ஒரு வாரத்துக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று பல்கலைகழக

2

## பொருள்களைக் கொள்வனவுசெய்ய கொழும்பில் அலைமோதும் மக்கள்

கொழும்பு, ஒக். 4
இலங்கையில் கொரோனா சமூகத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்ய மக்கள் முண்டியடிக்கின்றனர் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கம்பஹா மாவட்டத்தில் கொரோனா

2

## மீண்டும் இறுக்கமான சுகாதார நடைமுறை!!



சுகாதார அமைச்சு அறிவிப்பு

2

# இலங்கையில்.....

மினுவாங்கொடையிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்த 39 வயதுடைய பெண்ணொருவருக்கே கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. காய்ச்சல் காரணமாக கம்பஹா மருத்துவமனையில் அண்மையில் சேர்க்கப்பட்ட இவர், சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்புவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை மூலமே கொரோனா இருப்பது கண்டறியப்பட்டது. இதனையடுத்து மருத்துவமனை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் 15 பேர், அந்தப் பெண் தொழில் புரிந்த இடத்திலுள்ள 400 பேர் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் விபரமும் திரட்டப்பட்டுவருகின்றது. அனைவரிடமும் பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்படவுள்ளது. அத்து டன், குறித்த பெண்ணுக்கு எவ்வாறு கொரோனா பரவியது என்பது தொடர்பிலும் தற்போது ஆராயப்பட்டுவருகின்றது. அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக அங்கொடை ஐ.டி.எச் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-44)

# மூடப்பட்டது...

தொழிற்சாலை காலவரையின்றி மூடப்பட்டுள்ளது.

மினுவங்கொடவின் யாகஹத்துவ பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையினை இன்று காலை முதல்மூட நிர்வாகத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று மினுவங்கொட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அந்த ஆடைத் தொழிற்சாலையில் சுமார் 400 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்கள் அனைவரையும் சுயதனிமைப்படுத்த தேவையான அறிவுறுத்தல்களை வழங்கப்பட்டுள்ளன. (மஇ)

# அவதானம் ...

என்று தெரிவித்தார் இராணுவத் தளபதியான சவேந்திர சில்வா.

மினுவங்கொட பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கொரோனாப் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து சுமார் இரண்டு மாதங்களின் பின்னர் சமூகத் தொற்றாக கொரோனா உருவாகியுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பெரும் ஆபத்தானது. அதன் தீவிரத்தன்மை இலங்கையில் குறையவில்லை. உலகின் வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தற்போது கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். எத்தனை பாதுகாப்பு அடுக்குகளைத் தாண்டி அவரைக் கொரோனா தாக்கியிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்.

நாம் மிகவும் வெற்றிகரமாக கொரோனாத் தொற்றை இலங்கையில் கட்டுப்படுத்தியுள்ளோம். எனினும், கொரோனா மீண்டும் இங்கு வராது என்று அர்த்தம்கிடையாது. நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் தொடர்ச்சியாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும். இது அத்தியாவசியமாகவே கருதப்படுகிறது' என்றார். (மஇ)

# கைதிகளை பார்ப்பதற்கு தடை விதிப்பு

கொழும்பு, ஒக். 4

மஹரா மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்கள் வருகை தருவது இடைநிறுத்தப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் ஆணையகம் அறிவித்துள்ளது. சுமார் 2 மாதங்களின் பின்னர் இலங்கையில் கொரோனா சமூகத்தொற்று அவதானிக்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# கொரோனாத் தொற்றுக்குள்ளானவருடன்...

மினுவாங்கொடை யில் இருந்து சொந்த ஊருக்குத் திரும்பியுள்ளனர். கடந்த வாரம் ஒருவரும் நேற்றுமுன்தினம் ஒருவரும் புங்குடுதீவில் உள்ள தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் இருவரும் பஸ்களில் பயணம் செய்திருக்கின்றமையும் தெரியவந்துள்ளது. இதனிடையே ஊர் திரும்பிய பெண்களின் வீட்டுச் சூழலில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் பிரசன்னமாகி யுள்ளதுடன் தீவிர விசாரணை இடம்பெற்று வரும் நிலையில் அந்தப் பகுதி அபாய பகுதியாக அறிவிக்கப்படக்கூடும் என்றும், மக்களை சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்று மாறும் சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (ம-22)

# மறுஅறிவித்தல்....

விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு மாதங்களின் பின்னர் இலங்கையில் நேற்று சமூகத்தொற்று அவதானிக்கப்பட்டது. இதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்குமான 2ஆம் தவணைக்கான விடுமுறை எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மஇ)

# பொருள்களைக் கொள்வனவு....

தொற்றாளர் ஒரு வர் கண்டுபிடிக்கப்பட்டு நாடுமுழுவதும் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டு, பல பகுதிகள் முடக்கப்பட்டுள்ள நிலையிலேயே மக்கள் இவ்வாறு அத்தியவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய கடைகளில் குவியத் தொடங்கியுள்ளனர். (ம)

# ட்ரம்பின்...

அவரது மனைவி மெலனியா ட்ரம்ப் ஆகியோர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்க அதிபர்களின் அவசர இடமாற்றத்துக்காகப் பயன்படுத்தப்படும் வெள்ளைக் ஹெலிகொப்டர் மூலம் அவர் இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் அவரின் உடல்நிலையில் தற்போது சற்றுப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்றும் அடுத்த 48 மணி நேரத்தின் பின்னரே ட்ரம்பின் உடல்நிலை குறித்து உறுதியான தகவல்கள் வழங்க முடியும் என்றும் அவர் சிகிச்சை பெறும் மருத்துவமனை அறிவித்துள்ளது. (ம-இ)

# மீண்டும்....

'கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். அதற்கு தேவையான அதிஉச்ச ஒத்துழைப்பை வழங்குமாறு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்' என்று சுகாதார அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதுதொடர்பில் கருத்துவெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசால் வழங்கப்பட்ட சுகாதார ஆலோசனைகளை மக்கள் உரியவகையில் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்கியதாலேயே கடந்த காலங்களில் கொரோனா சமூகத்தொற்றை எம்மால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது. இந்நிலையில் தற்போது ஒரு தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

எனவே, வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். சுகாதார நடைமுறைகளை பின்பற்றுங்கள். அதேபோல் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட 56 நடைமுறைகள் நிச்சயம் நிறுவனங்களில் கடைபிடிக்கப்படவேண்டும். அவ்வாறு பின்பற்றப்படுகின்றனவா என்பது கண்காணிக்கப்படும். நோய் அறிகுறிகள் இருந்தால் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு செல்லுங்கள். பொதுவெளியில் நடைபெறும் நிகழ்வுகளை தவிர்த்துக்கொள்ளவும்' என்றார். (ம-44)

# மீண்டும் ஊரடங்கு...

ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மினுவங்கொட, திவுலபிடிய பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளுக்கு பயணத்தடையும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (மஇ)

# களனி பல்கலைக்கு...

மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நாளை முதல் குறித்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. உடனடியாக மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# 400 பேருக்கு...

ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மினுவங்கொடவைச் சேர்ந்த பெண்ணொருவர் கொரோனாப் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை நேற்று நள்ளிரவு உறுதிப்படுத்தப்பட்டு இன்று அதிகாலை அறிவிக்கப்பட்டது. இதையடுத்து இன்று நடத்தப்பட்ட துரிதகதி விசாரணைகளை அடுத்து மினுவங்கொட மற்றும் அந்தக் பெண் பணிபுரியும் இடங்களைச் சேர்ந்த 400 பேர் அடையாளம் காணப்பட்டு அவர்களிடத்தில் பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-இ)

## புதினம் தெரியுமோ

**கொரோனா கட்டுப்பாடுகள் எல்லாதையும் நீக்கியிருந்தினம். சனங்களும் தாங்கள் கடைப்பிடிச்ச கட்டுப்பாடுகளை ஒவ்வொண்டா விட்டு இப்ப இயல்பு நிலைக்கு வந்திட்டினம். சமூகத் தொற்று வராது எண்டு இராணுவத் தளபதியும், சுகாதார அதிகாரிகளும் மாறி மாறிச் சொல்லிக் கொண்டிருக்க, இப்ப என்னடா எண்டா கம்பஹாவில சமூகத்தில ஒருத்தருக்குக் கொரோனாவாம் எண்டு ஊரடங்கு போட்டிருக்கிறாங்கள். அந்தப் பெண்ணுக்கு எப்பிடிக் கொரோனா வந்தது எண்டது மர்மமா இருக்குது. இறுக்கமான கட்டுப்பாடுகளைத் தளர்த்திப் போட்டு மக்கள் கவனமா இருக்கோணும் எண்டு சொல்லிக் கொண்டிருக்கிறது சரியில்லைக் கண்டியளே. இப்ப கொரோனா சமூகத்துக்க கண்டுபிடிச்சிருக்கினம். அது எந்தளவு சமூகப் பரவல் ஆகியிருக்கு எண்டு இன்னும் தெரியாத நிலையில், இனியாவது அரசு கொரோனாவ தடுத்திட்டம், நாங்கள் அப்பிடி, இப்பிடி எண்டு தம்பட்டம் அடிச்சுக் கொண்டிருக்காமல் சுகாதாரக் கட்டுப்பாடுகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேணும் கண்டியளே.**

**-பட்சி**

# அனலைதீவு தெற்கில் மீன்பிடி படகுத்துறை மக்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

அனலைதீவு ஜே/38 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் பயனுறும் விதமாக அனலை தீவு தெற்கில் புனரமைக்கப் பட்ட மீன்பிடி படகுத் துறை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தலைமை யில் இடம்பெற்றது.



மேற்படி மீன்பிடித் துறையை ஆழப்படுத்தல் திட்டமானது கடற்தொழிலாளர் சங்கத்தவர்க ளின் வேண்டுகோளிற்கிணங்க தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு செயற்குழுவின் செயலாளர் திரு.தவசெல்வம் சிற்பரன் அவர்களின் ஒழுங்குப டுத்தலுக்கமைய ரூபா. 5 இலட்சம் செலவில் மேற்கொள் ளப்பட்டு மீனவர்களிடம் வைபவ ரீதியாக கையளிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆபத்தான கடற் பாறைகள் நிறைந்த கடற்பரப்பில் மீன்பி டிப்பதற்கு பெரும் அசௌகரி யங்களை இப் பிரதேச மீனவர் கள் சந்தித்து வந்துள்ளார்கள். இத் திடத்தின் பயனாக இனிவ ரும் காலங்களில் பாதுகாப் பான முறையில் இப் பிரதேச மக்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியும் என கடற்தொழில் சங்கத் தலைவர் ஜோன் பொஸ்கோ தெரிவித் துள்ளார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வ ரன், பேராசிரியர் வி.பி.சிவநா தன், திரு.தவச்செல்வம் சிற்ப ரன், மதகுருமார்கள், இளைஞர் அணி உறுப்பினர் திரு.சி. மதுசன், ஊர்காவற்துறை பிரதேச செயலக அதிகாரிகள், கடற்தொழிலாளர் சங்க உறுப் பினர்கள் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் கலந்து கொண்ட னர். (ந)

# பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உதவி

வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக் குட்பட்ட 61 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்க ளும், சிறுவர்களுக்கு குளிர் களி வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் உடுத்துறை கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் வீ.கணேஸ்வரன் தலைமையில் இடம்பெற் றது.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலைச் சேர்ந்த கெங்கா சுதனால் இந்த உதவிகள் வழங்கப்பட் டுள்ளன.

வடமராட்சி, கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட போக்கறுப்பு, முள்ளியான், வெற்றிலைக் கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திரா யன் கிராமங்களுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 61 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கே தலா 6 ஆயிரம் ரூபா க்கும் மேற்பட்ட உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில், வடமராட்சி கிழக்கு பிரதேச செய லக தலைமைக் கிராம அலுவலர் தவராசா, உடுத்துறை கிராம அலுவலர் சுபேஸ்குமார், உடுத்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் த.தங்கரூபன், உடுத்துறை கிராம அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்ட னர். (ப-160)



முல்லைத்தீவு துணுக்காய் வலயத் தின் மூன்று பாடசாலையின் தரம்5 மாணவர்களுக்கான விசேட கருத்த ரங்கு முல்லைத்தீவு மயில்வாக னன் ஆரம்ப பாடசாலை அதிபர் தலை மையில் நேற்று சனிக்கிழமை சிறப் பான ஒழுங்கு படுத்தலில் நடைபெற் றது.

# இழப்பீட்டை செலுத்தாமல் கப்பலை இழுத்து செல்கின்றனர்!

## சட்டமா அதிபர் திணைக்களம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக.4

இழப்பீட்டுக் கோரிக்கை தொடர் பாக பிறப்பித்த உத்தரவுகளுக்கு இணங்காமல், எம்டி. நியூ டைமன்ட் கப்பலை அதன் இயக் குநர்கள் இலங்கை கடற்பரப்பிலி ருந்து இழுத்துச் செல்கின்றனர் என சட்டமா அதிபர் திணைக்க ளம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் சட்டமா அதிப ரின் ஒருங்கிணைப்பாளரும், சட்டத்தரணியுமான நிஷாரா ஜெயரத்ன தெரிவித்துள்ளாதா வது,

அரசாங்கத்தின் பங்குதாரர்கள் அளித்த இழப்பீட்டு கோரிக் கையை செலுத்துவது தொடர்பாக கப்பலின் உரிமையாளர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட் டுள்ளன. கப்பல் உரிமையாளர்க ளுக்கு 442 மில்லியன் ரூபா இழப்பீட்டுக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்கனவே சமர்ப்பித் துள்ளது.

இது கப்பலில் ஏற்பட்ட தீயை அணைக்கவும், அதனால் கடல் சுற்றுச்சூழ லுக்கு ஏற்பட்ட பாதிப்பி னதும் மதிப்பீட்டுச் செலவினங்க ளுக்கும் ஆகும். இதற்கு கப்பல் உரிமையாளர் தரப்பு இணக்கம் தெரிவித்திருந்தது. எனினும் தற்போது இந்த உத்தரவுகளுக்கு இணங்காது, கப்பலை அதன் இயக்குநர்கள் இலங்கை கடற்பரப் பிலிருந்து அரேபிய கடற்பரப்பு நோக்கி இழுத்துச் செல்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



# மாட்டிறைச்சி இறக்குமதிக்கும் வீரசிங்கவுக்கும் சம்பந்தமில்லை

## *அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 4

அமைச்சரவை ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து நாட்டுக்குள் மாட்டிறைச்சி இறக்குமதிசெய்ய விமான நிலைய பணிப்பாளரும் தனது மாமாவுமான திலக் வீரசிங்கவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்ற செய்திகளை அமைச்சர் நாமல் ராஜபக்ச மறுத்துள்ளார்.



தடையைத் தொடர்ந்து, வீரசிங்க இப்போது நாட் டுக்கு மாட்டிறைச்சி இறக்கு மதி செய்யத் தயாராகி வருகின்றார் என்று சமூக ஊடகங்களில் நேற்று வதந்தி கள் வெளியாகின.

அத்தோடு இது அமைச்சர வைக்கு தடை முன்மொழி யப்பட்டமைக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும் என்றும் கூறப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த செய்திகள் தனது குடும்பத் துக்கு எதிரான தனிப்பட்ட தாக்குதல் என்றும் தனது குடும்பத்தில் யாரும் இறைச்சி இறக்குமதியில் ஈடுபட வில்லை என்றும் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இவ்வாறான குற்றச்சாட்டு கள் முன்வைக்கப்படு கின் றமை இது இரண்டாவது முறை என குறிப்பிட்டுள்ள நாமல் ராஜபக்ச, இது அரசி யல் போட்டி என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

# பாதாள உலகக் குழு உறுப்பினர் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, ஒக்.4

பாதள உலகக் குழு உறுப்பினர் ஒருவர் மென்டி ரக போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட் டுள்ளார். மீகொட பகுதியில் பாதள உலகக் குழு உறுப்பினரான 'நேவி ருவன்' என்பவரின் உதவியா ளர் எனக் கூறப்படும் 'திலக் படா' என்ற நபரே இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளார். மீகொட பகுதி யில் இன்று அதிகாலை பொலிஸா ருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்க மைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவ ளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தே கத்துக்கிடமான கார் ஒன்றைச் சோதனைக்குட்படுத்தியுள்ள பொலிஸார் அதிலிருந்து பெண்கள் பயன்படுத்தும் பை ஒன்றைச் சோத னைக்குட்படுத்தியுள்ளனர். இதன் போது, அதிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 50 கிராம் மென்டி ரக போதைப் பொருளை கைப்பற்றியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபரைச் சோதனைக்குட்படுத்திய போது அவரது பாதணிகளில் மிகவும் சூட்சுமுகமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த , 20 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளையும், 'நேவி சம்பத்' என்பருடையது எனக் கூறப்படும் 6 துப்பாக்கித் தோட்டக்களையும் கைப்பற்றியுள்ளனர். இதனைத் தொடர்ந்து துப்பாக்கியை மீட்ப தற்கு பொலிஸார் ஹோமாகவி லுள்ள வீடொன்றைச் சோதனைக் குட்படுத்தியுள்ளனர். இதன்போது சந்தேக நபர் பொலிஸாரிடமிருந்து தப்பிக்கும் நோக்கில் இரு மாடிக ளைக் கொண்ட அந்த வீட்டின் மேல் மாடியிலிருந்து கீழே குதித்துள்ளார். இதன்போது படுகா யமடைந்த சந்தேகநபர் ஹோமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு, பொலிஸாரின் பாதுகாப்பு டன் சிகிச்சை பெற்று வருகின்றார். சந்தேகநபரின் காதலி என்று கூறப்படும் 26 வயதுடைய பெண் ணும் இதன்போது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேல திக விசாரணைகளை மீகொட பொலிஸார் முன்னெடுத்து வருகின் றனர். (வ-இ)

## சப்ரகமுவவில் மழை பெய்யும்

சப்ரகமுவ மாகாணத்தில் மழை பெய்யும் சாத்தியம் காணப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. மேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் சிறியளவில் மழை பெய்யும் சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சீரான வானிலை நிலவும். காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (வ-இ)





சுசிலன் பவுன்டேசன் நிறுவனத்தினரால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பண்டாரவன்னியன் மகா வித்தியாலயம், மன்னாகண்டல் பாடசாலை, பேராறு பாடசாலை , முத்துவிநாயகர் பாடசாலை, சம்மாளங்குளம் பாடசாலை, அலைகல்லுப்போட்டகுளம் ஆகிய பாடசாலைகளை இணைத்து புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ள இருக்கும் மாணவர்களின் சித்திவீதத்தை உயர்த்தும் முகமாக விசேட வகுப்பு நடாத்தப்பட்டது. இதற்கான நிதி உதவியை சுசீலன் பௌண்டேசன் இணைப்பாளர்களில் ஒருவரான புஸ்பராசா கபிலன் வழங்கியிருந்தார். (ந-222)

# சிவன் ஆலய குரு கொலை தொடர்பில் உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும்

### சைவ மகா சபை கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக்.4

புங்குடுதீவு - பாணாவிடை சிவன் ஆலய பிரதம அர்ச்சகர் ரூபன் சர்மாவின் படுகொலையை அகில இலங்கை சைவ மகா சபை வன்மையாக கண்டித்துள்ளது.



கொலையாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங்குவதன் மூலம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட தரப்புக்களை சைவ மகா சபை கேட்டுக்கொண்டுள்ளது. மேற்படி படுகொலை தொடர்பாக சைவ மகா சபை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாய் மதமாம் சைவ சமயத்தில் அளவுகடந்த பற்றுறுதிகொண்ட ரூபன் சர்மா, ஜீவகாருண்யத்துற்காக அதிகம் போராடியவர். சமூக விரோத செயல்களுக்கு எதிராக துணிந்து குரல்கொடுத்தவர். இந்த நிலையிலேயே இவர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார். இந்தக் கொலையின் பின்னணி ஆராயப்பட்டு உண்மை வெளிக்கொண்டு வரப்படவேண்டும். கொலையாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும். இதன் மூலம் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படவேண்டும்.

மனிதத்துவத்திற்கும் ஜீவகாருண்யத்திற்கும் போராடி உயிர்துறந்த தாய் மதத்தில் அளவு கடந்த பற்றுறுதி உடைய வணக்கத்துக்கும் போற்றுதலுக்குரிய ரூபன் சர்மாவிற்கு ஆத்மார்த்த அஞ்சலிகள். அவரது ஆத்மா இறை சிவனின் பாதார விந்தங்களில் சாந்தி பெறும். அவரது நல்ல எண்ணங்கள் இவ்வுலகில் நிலைத்து நிற்கும். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## தீவக விருட்சத்தால் முன்பள்ளிக்கு உதவி





தெல்லிப்பழை. ஒக்,4

சிறுவர் தினத்தை முன்னிட்டு தீவக விருட்சம் குழுமத்தின் மறைந்த உபதலைவர் மாறனின் நினைவாக, தீவக குழுமத்தின் அனுசரணையில். தெல்லிப்பழை கட்டுவன் முன்பள்ளியில் நேற்று சனிக்கிழமை சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் சிறுவர்களுக்கான அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டதுடன், முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து முன்பள்ளியின் வளாகத்தில் நடுவதற்கென மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

சமூக செயற்பாட்டாளர் தனுபனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் முன்பள்ளி மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ந)

## மாகாணமட்ட கருத்தரங்கு

முல்லைத்தீவு, செப்.4

இம் மாதம் இடம்பெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு மாகாண மட்டக் கருத்தரங்கு ஒன்று துணுக்காய் கல்வி வலயத்தில் அண்மையில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்துவந்தவருமான அமரர் சித்திரகலா சண்முகநாதனின் இரண்டாம் ஆண்டு நினைவாக அவரது குடும்பத்தவர்களின் நிதிப் பங்களிப்பில் வடமாகாண ஆரம்பக்கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சற்குணராசா தலைமையில் இக்கருத்தரங்கு இடம்பெற்றது. நான்கு பிரிவுகளாக இடம் பெற்ற இந்தக் கருத்தரங்கில் வலயத்தின் எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (ந)





## “கிராமத்திற்கு ஒரு வீடு” முதற்கட்ட நிதி வழங்கல்

கொடிகாமம், ஒக் 4

புதிய அரசாங்கத்தின் “கிராமத்திற்கு ஒரு வீடு” திட்டத்தில் யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 44 பயனாளிகளுக்கு நேற்று சனிக்கிழமை காலை வீடு அமைப்பதற்கான முதற்கட்ட நிதி வழங்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ் மாவட்ட தலைவர் ரவீந்திரன் தலைமையில் வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேசசபை உறுப்பினரான சதாசிவம் இராமநாதன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கினார். (ந-159)



## விதிகளை மீறினால் சட்ட நடவடிக்கை

### நாளை தொடக்கம் நடைமுறை

கொழும்பு, ஒக்.4

கொழும்பில் வீதி ஒழுங்குச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக நாளை முதல் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான பிரிவு இயக்குனரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திக ஹப்புகொட இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். இதற்காக விமானப்படையின் ஆதரவு பெறுக்கொள்ளப்படும். அதற்கமைய வீதி ஒழுங்கு சட்டத்தை மீறும் சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தல், அல்லது அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)







"விதையனைத்தும் விருட்சமே" குழுமத்தின் 'பிளாஸ்டிக் கழிவுகள் அற்ற யாழை நோக்கிய பயணம்' எனும் செயற்திட்டத்தின் மூன்றாம் கட்டமாக, நேற்றைய தினம் சரசாலை குருவிக்காடு பறவைகள் சரணாலயத்தில் முறையற்ற விதத்தில் கொட்டப்பட்டிருந்த கழிவுகள் உரியமுறையில் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை ஊழியர்கள், கிராம சேவையாளர், சுகாதார பரிசோதகர், பிரதேச சபை உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர், ஊர் மக்கள் மற்றும் தன்னார்வ இளைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந-222)

# ஊழியர்களின் ஓய்வுக்காலம் இன்னொரு சேவைக்காலமே

## இளம் சமுதாயத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்கிறார் யாழ்.பிரதேச செயலர் சுதர்சன்

குருநகர்,ஒக் 4

அரச ஊழியர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் அவ் ஓய்வுக்காலம் இன்னொரு சேவைக்காலம் ஆகும் என யாழ்.பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் தெரிவித்துள்ளார்.

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்ப்பாண பிரதேச பிரிவு சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் மலர் வெளியீட்டு நிகழ்வும் கடந்த 26ம் திகதி யாழ்.பிரதேச செயலகத்தில் அதன் தலைவர் வி.சிறிசக்திவேல் தலைமையில் நடைபெற்றன.

இங்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

சேவையிலிருந்து இளைப்பாறியுள்ள ஓய்வூதியர் தாம் வசிக்கும் பகுதிகளில் இயங்கிவரும் முதியோர் சங்கங்களில் இணைந்து சேவையாற்ற முன்வரவேண்டும். உங்கள் ஒத்துழைப்பு உங்கள் பகுதியில் இயங்கும் கிராம உத்தியோகத்தர்களுக்குத் தேவை. எமது பிரதேச அபிவிருத்தியில் உங்கள் அனுபவம் தேவை. முதுமையில் இளமை அவசியம். ஆனால் இன்று சேவையில் உள்ள பலர் இளமையில் முதுமையாகக் கடமையாற்றுவதனால் அரச சேவையை முன்நகர்த்த முடியாமல் உள்ளது.

நீங்கள் உங்கள் சேவைக்காலத்தில் வடக்கு மாகாணத்தில் பல அச்சுறுத்தலுக்கு மத்தியில் சேவை புரிந்துள்ளீர்கள். அப்போது பல சவால்களைச் சந்தித்தவர்கள். அன்றைய காலப் பகுதியில் வசதிகளற்ற நிலையில் போரின் மத்தியில் கடமையாற்றியவர்கள். ஆனால் இன்றைய அரச ஊழியர்கள் தற்போது பல வசதிகளுடன் கடமையாற்றுகிறார்கள். அந்தக் காலத்தில் நீங்கள் செய்த சேவையை ஆவணப்படுத்த முன்வரவேண்டும் என்றார். (ந-51)

### ஜோர்தான் தொழிற்சாலையில்

## 300 இலங்கையருக்கு கொரோனாத் தொற்று

ஜோர்தானிலுள்ள தொழிற்சாலையொன்றில் பணியாற்றும் 300 இலங்கையர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் சமூக வலைத்தளங்களில் காணொலியை வெளியிட்டுள்ளனர்.

ஆயிரத்து 200பேர் பணிபுரியும் அந்தத் தொழிற்சாலையில் 400 இலங்கையர்கள் பணிபுரிகின்றனர். ஜோர்தானில் கொரோனாத் தொற்றுக்குள்ளான இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தங்களுடன் பணியாற்றிய நண்பர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனவும் ஜோர்தானில் 5 தொழிற்சாலைகள் கொரோனா காரணமாக சீல் வைக்கப்பட்டுள்ளன என இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வெளிவிவகார பணியகத்தின் ஊடக பேச்சாளரிடம் கேட்டபோது, தொற்றுக்குள்ளான இலங்கையர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் வருடாந்த சிறுவர் தின நிகழ்வுகள் கல்லூரியின் முன்றலில் கல்லூரியின் அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.



## உயிரிழந்த நிலையில் கரையொதுங்கும் கடலாமைகள்

கொழும்பு, ஒக்.4

கல்கிஸை கடற்கரைப் பகுதியில் உயிரிழந்த நிலையில் கடலாமைகள் பல கரையொதுங்கியுள்ளன என கல்கிஸை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். நேற்று மாலை வரை மொத்தம் மூன்று கடலாமைகள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன. இதேவேளை காலிமுகத்திடல் பகுதியிலும் உயிரிழந்த நிலையில் கடல் ஆமைகள் சில கரையொதுங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆமைகளின் உயிரிழப்புக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (வ-இ)



# வவுனியாவில் காப்பெற் வீதி பணிகள் ஆரம்பம்

வவுனியா,ஒக்.4

வவுனியா, ஆசிகுளம் கிராமசேவகர் பிரிவில் 3 கிலோ மீற்றர் நீளமான வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானால் நேற்று சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.



ஜனாதிபதியின் விசேட வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தினூடாக கற்குளம் படிவம் 1,2,3,4 ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதான வீதி புனரமைப்புக்கு 78 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப பணிகள் உத்தியோகபூர்வமாக நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் வவுனியா நகரசபை உப தவிசாளர் சு.குமாரசமி, தெற்கு தமிழ் பிரதேசசபை உப தவிசாளர். வே.மஹேந்திரன், பிரதேச சபை உறுப்பினர்.திரவிய வதனி, வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ந-110)

# இயக்கச்சி –கோவில் வயல் பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அடாவடி

- விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகள் கைது
- விவசாய உபகரணங்களும் பறிமுதல்



கிளிநொச்சி, ஒக்.4

இயக்கச்சி கோவில் வயல் பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் காணி உரித்து ஆவணங்களுடன் வயல் விதைப்பில் ஈடுபட்டிருந்த இயக்கச்சி பகுதியைச் சேர்ந்த 12 விவசாயிகளை, சுண்டிக்குளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் அத்துமீறி வயல் விதைப்பில் ஈடுபட்டார்கள் என்று குற்றம் சுமத்தி நேற்று சனிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் அவர்கள் பயன்படுத்திய வாகனங்கள், பாவித்த உபகரணங்கள் மற்றும் தொலைபேசிகளையும் பறிமுதல் செய்து அவர்களை அறிவியல் நகர் பகுதியிலுள்ள தமது அலுவலகத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

மாலை வரை அவர்கள் விடுதலை செய்யப்படவும் இல்லை. பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்படவும் இல்லை. இதனைத் தொடர்ந்து இவ்விடயம் அவர்களது உறவினர்களால் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஜீவராஜா ஆகியோர் அறிவியல் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள வனஜீவராசிகள் திணைக்கள பிரதான அலுவலகத்துக்குச் சென்றபோது கைதுசெய்யப்பட்டவர்கள் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களின் கைது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் வினவியபோது அதிகாரிகள் அதற்கான பதிலை வழங்க மறுத்துள்ளனர்.

கைதானவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது இவர்கள் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேட்டுக் கொண்டபோதும் அவர்கள் எவ்வித உடன்பாட்டுக்கும் வரவில்லை. தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாதுவிடின் இவ்விடத்தை விட்டுச் செல்ல முடியாது’ என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அலுவலக வாயிலில் அமர்ந்ததன் பின்னர் கைதுசெய்யப்பட்ட 12 பேரையும் அவர்களது உடமைகளையும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மாலை 6 மணியளவில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முற்படுத்தியிருந்தனர். 12 பேரும் இன்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் விவசாய நடவடிக்கை மேற்கொள்வதற்காக 2014 ஆம் ஆண்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக கோவில் வயல் மக்கள் தெரிவிக்கின்றனர் ஆனால் அதன் பின்னர் வனஜீவராசிகள் திணைக்களம் எல்லைக்கல் நாட்டியுள்ளது. தற்போது அது தமக்குரிய காணி எனத் தெரிவித்து மக்களை கைது செய்துள்ளனர். இது தொடர்பாக கோவில் வயல் கமக்கார அமைப்பின் செயலாளர் தெரிவிக்கையில்,

இப் பகுதியில் 1974 ஆம் ஆண்டு முதல் விவசாயம் செய்து வருகின்றோம். போர் நிறைவடைந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் 2017 ஆண்டு முதல் விவசாயம் செய்து வருகின்றோம். 2017ம் ஆண்டு வருகை தந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் எமது பத்திரங்கள் மற்றும் வரைபடங்களை பார்வை யிட்ட பின்னர் எமது விவசாய நடவடிக்கைகளுக்கு இடையூறு வழங்கவில்லை. தொடர்ந்து 2019ஆம் ஆண்டு வரை விவசாய நடவடிக்கையை மேற்கொண்டோம். ஆனால் நேற்று இவ்வாறு வந்து வயல் விதைப்பில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்துள்ள னர் எனத் தெரிவித்தார். (ந-6)




# குப்பைகளை உண்ணும் யானைகள்

## சர்வதேச ஊடகங்களின் கவனத்தைப் பெற்ற யாழ் புகைப்படக் கலைஞனின் புகைப்படங்கள்

அம்பாறை , ஒக்.4

யாழ்ப்பாணத்து புகைப்படக் கலைஞரால் எடுக்கப்பட்ட அம்பாறை, ஒலுவில் பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளை உணவாக உட்கொள்ளும் யானைகளின் புகைப்படங்கள் சர்வதேச ஊடகங்களின் கவனத்தைப் பெற்றுள்ளன.

சம்மாந்துறை, கல்முனை, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கறைப்பற்று மற்றும் ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களின் குப்பைகள் இந்த இடத்திலேயே கொட்டப்படுகின்றன. இது காட்டுக்கு அருகில் உள்ள பகுதி என்பதனால் யானைகள் உட்பட மிருகங்கள் உணவு தேடி அங்கு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் குப்பைகளில் பொலித்தீன், லன்ச் சீட், போன்ற உக்காத பொருள்கள் உள்ளன எனவும், காட்டு யானைகள் உட்பட விலங்குகள் இதனை உட்கொண்டு உயிரிழக்கின்றன எனவும் சுற்றுச் சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த காலங்களில் உயிரிழந்த யானைகள் பலவற்றின் வயிற்றில் உக்காத பொலித்தீன் உட்பட குப்பைகள் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைகளை வெளிக்கொணரும் விதமாக யாழ்ப்பாணத்தை சேர்ந்த புகைப்பட கலைஞரான தர்மபாலன் திலக்ஷன் என்பவரினால் புகைப்படக் கண்காட்சியொன்றும் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் புகைப்படங்களே தற்போது சர்வதேச ஊடகங்களின் கவனத்தைப் பெற்றுள்ளன. (வ-இ)




# முத்தமிழ் ஆரம்பப் பாடசாலையில் சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ்ப்பாணம் நல்லூர் முத்தமிழ் ஆரம்ப பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வுகள் பொறுப்பாசிரியர் சியாமளா சண்முலிங்கம் தலைமையில் நேற்று சனிக்கிழமை பாடசாலையில் நடைபெற்றன.

அவ்வேளை பிரதேசசபை உறுப்பினர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார், சட்டத்தரணி சுதா கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டு சிறுவர் சிறுமிகளை மகிழ்வித்து வாழ்த்தினர். நிகழ்வில் சிறுவர், சிறுமிகள் இணைந்து கேக் வெட்டி குதூகலத்துடன் இந் நாளை கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந் நிகழ்வில் பாடசாலையின் முகாமைத்துவ குழுத் தலைவர் செ.விபூஷன், சமூக செயற்பாட்டாளரும், உறுப்பினருமாகிய சி.அமிர்தலிங்கம் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (ந-20)





# ரிசாட்டுக்கு அரசுக்குள் இடமில்லை அரசு தரப்பு அழுத்தமாகத் தெரிவிப்பு

## திருச்சபையின் கருத்துக்கு எதிரொலி

கொழும்பு, ஒக்.4

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு அரசாங்கத்துக்குள் எந்த இடமுமில்லை என அரசு தரப்பு தெரிவித்துள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் கைதாகிய முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் சகோதரர் ரியாத் விடுவிக்கப்பட்டதன் பின்னனியில் மறைக்கப்பட்ட ஒப்பந்தம் ஒன்று உள்ளது என கத்தோலிக்க திருச்சபை சந்தேகம் வெளியிட்டது. இதையடுத்தே அரச தரப்புக்கள் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளன.

இதன்படி, முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு பதவி வழங்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. கடும்போக்குவாதிகளுடன் எந்தவிதமான உடன்படிக்கையையும் அரசாங்கம் செய்துகொள்ளாது என்று விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, பதியுதீன் அரசாங்கத்துக்குள் கொண்டுவரப்பட மாட்டார் என்று தெரிவித்துள்ளார். ரிசாட்டுடன் ஒப்பந்தம் செய்ய அரசாங்கம் முட்டாள் அல்ல என்று அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, தனது கட்சி அரசாங்கத்துடன் எந்த உடன்பாடும் கொண்டிருக்கவில்லை. அத்துடன் அரசாங்கத்துடன் எந்த பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்று ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார். (வ-இ)

# திரைவிமர்சனம்




வெளிநாடுகளில் வேலைக்காகச் செல்பவர்களின் துயரங்களைச் சொல்லும் படங்கள் தமிழில் ஒன்றிரண்டு வந்திருக்கின்றன. ஆனால், க/பெ ரணசிங்கம் வெளிநாடுகளில் வசிப்பவர்களின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் மிகக் கொடூரமான ஒரு சிக்கலை விவரிக்கிறது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் வசிக்கும் ரணசிங்கம் (விஜய் சேதுபதி), அரியநாச்சியை (ஐஸ்வர்யா ராஜேஷ்) கல்யாணம் செய்த பிறகு வேலை பார்ப்பதற்காக வளைகுடா நாடு ஒன்றுக்குச் செல்கிறார். அங்கு ஏற்பட்ட ஒரு விபத்தில் அவர் இறந்துவிட, அவரது உடலை சொந்த ஊருக்குக் கொண்டு வர அரியநாச்சி நடத்தும் போராட்டம்தான் படம்.

சிறையில் இருக்கும் கணவனை மீட்க, கடத்தப்பட்ட கணவனை மீட்க, குழியில் விழுந்த குழந்தையை மீட்க பெண்கள் நடத்தும் போராட்டங்களைப் பின்னணியாக வைத்து வந்திருக்கும் உணர்ச்சிகரமான படங்களின் பட்டியலில் இந்தப் படமும் சேர்ந்திருக்கிறது.

படம் தொடங்கிய சில நிமிடங்களிலேயே கதாநாயகன் மரணமடைந்துவிடுகிறான் என்ற முக்கியமான கட்டத்திற்கு படம் வந்துவிடுகிறது.

இதற்குப் பிறகுதான் ஃப்ளாஷ்பேக்கில் ரணசிங்கத்தின் வாழ்க்கை சொல்லப்படுகிறது.

ரணசிங்கம் அரியநாச்சி இடையிலான காதல் காட்சிகள், திருமண வாழ்க்கை ஆகியவை ரசிக்கவைக்கும் வகையிலேயே சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தக் காட்சிகள் வருவதற்கு முன்பே துயரம் நடந்துவிட்டதால், இந்தக் காட்சிகளின் அழுத்தமும் கூடியிருக்கிறது.

இம்மாதிரியான சூழலில் சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் அதிகாரவர்க்கத்தின் அலட்சியம் விரிவாகக் காட்டப்படுகிறது. சாதாரண மக்களை கீழ்நிலை அதிகாரிகள்கூட எந்த எல்லைக்குத் துரத்த முடியுமோ அந்த எல்லைக்குத் துரத்துகிறார்கள். ஆனால், அதற்கு முற்றிலும் மாறாக அரசியல்வர்க்கத்தின் ஒரு பகுதியினர் ரொம்பவுமே நல்லவர்களாக இருக்கிறார்கள். அரியநாச்சியின் பிரச்சனை தெரிந்தவுடனேயே உதவுவதற்கு களத்தில் இறங்கிவிடுகிறார்கள். இறந்து போன கணவனின் உடலை வாங்க பத்து மாதமாகப் போராடும் பெண்ணின் கதையில் இவையெல்லாம் ரொம்பவுமே நெருடும் காட்சிகள்.

முழு படத்தையும் தோளில் சுமந்திருக்கிறார் ஐஸ்வர்யா ராஜேஷ். எல்லாத் தருணங்களிலுமே இயல்பாக இருக்கிறார். உணர்ச்சிகரமான இந்தப் படத்தில் விஜய் சேதுபதி உள்பட படத்தில் வரும் மற்றவர்கள் அனைவரும் ஒரு கட்டத்தில்கூட மிகையாக நடிக்கவில்லை என்பது படத்தின் ப்ளஸ்.

படத்தில் ரணசிங்கம் மக்களுக்காக நடத்தும் போராட்டங்கள் விரிவாகக் காட்டப்படுகின்றன. இது படத்தின் நீளத்தை வெகுவாக அதிகரித்திருக்கிறது (2 மணி நேரம் 57 நிமிடங்கள்). பல காட்சிகள் தேவையில்லாத நீளத்துடன் இருக்கின்றன.

மேலும் பல காட்சிகள் படத்தில் தேவையே இல்லாதவை. படத்தின் க்ளைமாக்ஸில் வரும் இறுதிச் சடங்கு தொடர்பான காட்சிகள், படத்தை ஒரு படி கீழே இழுத்திருக்கின்றன. இவையில்லாமல் இருந்திருந்தால், இன்னும் கச்சிதமான படமாக வந்திருக்கும்.

படத்துக்குப் பின்னணி இசை ஜிப்ரான். பாடல்கள் மனதில் நிற்கவில்லையென்றாலும் சில வரிகள் நீண்ட நேரம் நெஞ்சில் நிற்கின்றன.





## சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கை திரைப்படமாகிறது



1980, 1990களில் தமிழ் திரையுலகத்தில் ரசிகர்கள் மனதில் கவர்ச்சி கன்னியாக வலம் வந்த நடிகை சில்க் ஸ்மிதா வாழ்க்கை வரலாறு படமாகிறது.

தமிழ் சினிமாவில் பல கவர்ச்சி நடிகைகள் இருந்தாலும், தன்னுடைய மயக்கும் விழிகளாலும், உடல் அமைப்பாலும் மொத்த தென்னிந்திய ரசிகர்களை தன் பக்கம் கட்டிப் போட்டவர் சில்க் ஸ்மிதா. ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் சில்க் ஸ்மிதா. அவருடைய இயற் பெயர் விஜயலட்சுமி. ஆனால் சில்க் ஸ்மிதா சின்ன வயதில் சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டப்பட்டுள்ளார். அவர் வாழ்க்கையில் சந்தித்த போராட்டங்கள் ஏராளம். அவற்றை மையமாக வைத்து படம் உருவாகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## குழந்தைகளாக மாறிய பிரபலங்கள்







சமூக வலைத்தளங்களில் அடிக்கடி ஏதாவது ஒரு டிரெண்ட் வந்து கொண்டே இருக்கும். சில மாதங்களுக்கு முன்பு பேஸ் ஆப் மூலம் ஒவ்வொருவரும் அவர்களது உருவங்களை இஷ்டத்துக்கும் மாற்றிக் கொண்டார்கள்.

வயதான தோற்றம், பெண் தோற்றம் என சமூக வலைத்தளம் முழுவதும் எது உண்மை, எது பொய் என குழப்பமாகும் அளவிற்கு அவ்வளவு புகைப்படங்களைப் பகிர்ந்திருந்தார்கள்

தற்போது சிறுவர் தினத்தை முன்னிட்டு அதே பேஸ்ஆப்பில் பிரபலங்களின் தோற்றத்தை சிறுவர், சிறுமியர் காலத்திற்கு ஏற்ப மாற்றுவது டிரெண்டாகி வருகிறது. அந்த வகையில் சிறுவன், சிறுமியாக மாற்றிய புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. இதெல்லாம் பார்ப்பதற்கு கொஞ்சம் ஓவராக இருந்தாலும், சுவாரசியமாகத்தான் இருக்கிறது.



# ஐ.பி.எல். பார்வையாளர் எண்ணிக்கை உயர்வு!

கொழும்பு, செப்.4

ஐ.பி.எல். தொடரின் பார்வையாளர்கள் எண்ணிக்கை இந்த வருடம் 15 சதவீதமாக உயர்வடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய அரபு எமிரகத்தில் நடைபெறும் 13 ஆவது ஐ.பி.எல் தொடர் நவம்பர் 10 ஆம் திகதியுடன் நிறைவுபெறுகிறது. டுபாய், அபுதாபி, ஷார்ஜாவில் உள்ள மைதானங்களில் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.



ஐ.பி.எல். ஆட்டத்தின் முதல் வார தொலைக்காட்சி ரேட்டிங் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. செப்ரெம்பர் 19 முதல் 25 வரையிலான ஆட்டங்களை 26.9 கோடி (269 மில்லியன்) பேர் பார்த்துள்ளார்கள்.

இதை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பார்வையாளர்கள் எண்ணிக்கை 15 சதவீதம் அதிகமாகியுள்ளது.

இந்தக் கணக்கு தொலைக்காட்சி வழியாகப் பார்த்தவர்களை வைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. இணையம் வழியாக ஐ.பி.எல் ஆட்டத்தை நேரலையாகப் பார்த்தவர்களின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை. (எ)



# மீள வருகின்றார் பென் ஸ்டோக்ஸ்

லண்டன், செப்.4

இங்கிலாந்தின் சகலதுறை ஆட்டக்காரர் பென் ஸ்டோக்ஸ் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் விரைவில் இணைக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணியின் சிறந்த வேகப்பந்து வீச்சாளரும், சகலதுறை ஆட்டக்காரருமான பென் ஸ்டோக்ஸ் தற்போது நியூஸிலாந்தில் உள்ளார். அவர் ஐ.பி.எல். தொடர் தொடங்கிய போது ஐக்கிய அரபு அமீரகம் திரும்பவில்லை. இதனால் முதல்பாதி தொடரில் விளையாடுவது சந்தேகம் எனக் தெரிவிக்கப்பட்டது.

அந்த அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கும் ஷேன் வோர்ன் “எப்படியும் இந்த வருட ஐபிஎல் தொடரில் பென் ஸ்டோக்ஸ் விளையாடுவார் என்ற நம்பிக்கை உள்ளது. அவர் மிகப்பெரிய இழப்பு. எங்களுடைய நினைப்பு அவருடன் இருக்கிறது. பென் ஸ்டோன்ஸ் அணியில் இருந்தால் மிகவும் வலுவான அணியாக தோன்றும்” என்று தெரிவித்திருந்தார்.

தற்போது நியூஸிலாந்தில் இருந்து பென் ஸ்டோக்ஸ் புறப்பட்டு விட்டார் என்று ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தெரிவித்துள்ளது. இன்று அல்லது நாளை ஐக்கிய அரபு அமீரகம் வந்தடைவார். ஒரு வார தனிமைப்படுத்தலுக்குப் பின்னர் அணியில் இணைவார் என்று கூறப்படுகின்றது. (எ)

# நாளைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.4

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தும் “யாழின் நாயகன்” கால்பந்தாட்ட தொடர் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக நடைபெற்று வருகிறது. நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி எதிர் புத்தூர் எவரெஸ்ட் அணிகளும், பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணியும் மோதவுள்ளன. (எ-422)





# நடால், ஸ்வீடோலினா நான்காவது சுற்றில்!

பரிஸ், செப்.4

பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றில் நடால், தியேம், ஹெலப், ஸ்வீடோலினா ஆகியோர் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டம் ஒன்றில், ஸ்பெயினின் முன்னணி வீரரான ரபேல் நடால், இத்தாலியின் ஸ்டெபனோ டிராவாக்லியாயை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில், ரபேல் நடால், 61, 64, 60 என்ற நேர் செற் கணக்குகளில் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

இன்னொரு ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டமொன்றில், ஜேர்மனியின் அலெக்ஸண்டர் ஸ்வெரவ், இத்தாலியின் மார்கோ செச்சினாடோவுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், 61, 75, 63 என்ற நேர் செற் கணக்குகளில் அலெக்ஸண்டர் ஸ்வெரவ், வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு தகுதிபெற்றார்.

மற்றொரு ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டமொன்றில், ஒஸ்திரியாவின் டோமினிக் தியேம், நோர்வேயின் காஸ்பர் ரூட்டை எதிர்த்து விளையாடினார்.

இந்த ஆட்டத்தில் 64, 63, 61 என்ற நேர் செட் கணக்குகளில் டோமினிக் தியேம் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்குள் நுழைந்தார்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டமொன்றில், ரோமேனியாவின் சிமோனா ஹெலப், அமெரிக்காவின் அமண்டா அனிசிமோவாவுடன் மோதினார்.

எதிர்பார்ப்பு மிக்க இந்த ஆட்டத்தில் 60, 61 என்ற நேர் செற் கணக்குகளில் சிமோனா ஹெலப், வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு தகுதிபெற்றார்.

இன்னொரு பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டமொன்றில், உக்ரேனின் எலினா ஸ்விடோலினா, ரஷ்யாவின் எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவாவுடன் பலப்பரீட்சை நடத்தினார்.

பரபரப்பாக நகர்ந்த இப்போட்டியில், 64, 75 என்ற நேர் செட் கணக்குகளில் எலினா ஸ்விடோலினா, வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்குள் அடியெடுத்து வைத்தார். (எ)

# சகானாவுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட தடகளத் தொடரில் பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் நல்லூர் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த பி.சகானா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச அணிகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களிற்கான தடகளத் தொடர் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

நேற்று சனிக்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான நீளம் பாய்தலில் நல்லூர் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த பி. சகானா 4.69 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், கரவெட்டி பிரதேச செயலக செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.ஆரணி 4.68 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். சுவர்ணா 4.60 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (எ-422)

